31rt March 1969

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கேள்வி காட்டிலாகாவைப் பொருத்தது. கனம் அங்கத்தினர் கேட்பது, நிலத்தை பகிர்ந்து அளிப்பது பற்றி. யாருக்கும் அதைப் பட்டா செய்து கொடுப்பதல்ல. வேண்டுமானால் நீண்டகால குத்தகைக்கு ஐந்தாண்டு, பத்து ஆண்டு என்று கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கலாம். காட்டு வளத்தைப் பெருக்கத்தான் அரசாங்கம் விரும்புகிறது. அப்படி காடுகளும் விவசாயத் திற்குப் பயன்படுத்தும் வகையில் இருந்தால் பயன் படுததலாம் என்று பொதுவாக இருக்கிறது. நிலம் வேண்டுமென்ற கோரிக்கை உள்ளவர்கள் காட்டு இலாகா அதிகாரிகளுக்கு மனுச் செய்யவேண்டும். காட்டு இலாகா அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள அங்கே போய் பார்த்து விவசாயத் திற்கு அதைக் கொடுக்கலாமா என்று கண்காணித்து முடிவெடுக்கிறார்கள். அதற்குப் பிறகு கொடுப்பதாக இருந்தால் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், காட்டு இலாகா அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் சேர்ந்த கூட்டத்தில் அவற்றைப் பரிசீலித்து முடிவு எடுத்து வழங்குகிறார்கள்.

திரு. டி. கே. சுப்பையா : ரெவின்யூ போர்டு கலைக்கப்படும் என்று அமைச்சர் அறிவித்த பிறகு ரெவின்யூ இலாகாவினர் இதில் கவனம் செலுத்தி ஆக்க பூர்வமாக திட்டங்கள் நிறைவேற்றுவார்களா ? அப்படிச் செய்வார்கள் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எடுத்துவிட்ட பிறகு ஆலோசிக்க வேண்டியது இது. இப்போது அறிவிப்பு செய்திருக்கிறார்கள். சீக்கி ரத்தில் நடைபெறக்கூடிய காரியம் அல்ல. இப்போது அதைப்பற்றிய சந்தேகம் அங்கத்தினருக்கு வரவேண்டியதில்லை.

Reclamation of sandy wastes in East Tirunelveli district.

*340 Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether requests have been received for the grant of loans and subsidies for the reclamation of vast areas of sandy wastes in East Tirunelveli district;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) வேளாண்மைத்துறை இயக்குநருக்கோ அல்லது அரசுக்கோ வேண்டுகோள் எதுவும் வந்து சேரவில்லை.

(இ), (உ) : இவ்வினாக்கள் எழவில்லை.

Thiru D. SANTOSHAM : The District Development Council itself has passed a resolution requesting that special subsidies or loans may be given for the concrete cultivation scheme that has recently been adopted in that area. Has not that resolution of the District Development Council at least been received by the Government?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது சம்பந்தமாக மாவட்ட கலெகடரிடமிருந்துதான் தகவல் கிடைத்திருக்கிறது. டி.டி.சி.யில் போடப்பட்ட தீர்மானமா இல்லையா என்று தெரியவில்லை. மாவட்ட கலெக்டருக்கு இது சம்பந்தமாக ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் மணற்பாங்கான இடங்களை விவசாயத்திற்கு எப்படிக் கொண்டு வருவது என்று திட்டமிட்டு 2 அல்லது 2½ அடி ஆழத்திற்கு மண் எடுத்து சிமெண்ட் காங்கிரீட் போட்டு அதன் மீது விவசாயத்திற்கு ஏற்ப மண்ணைச் சேர்த்து சாகுபடி செய்கிறோம். தண்ணீர் இறங்கும் நிலை

[31st March 1969

இல்லாமல் தேங்கியிருக்கும் நிலையில் குறைந்த பட்சம் அங்கே விவசாயத்திற்காக 80 எக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த அளவில் ரூ. 5,000 அதற்காகக் கடன் உதவ வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அந்தத் தொகையை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். முழுமையும் கடனாகத் தருவோம் என்றும், ரூ. 500 சகாயத் தொகையாகவும், ரூ. 4,500 கடனாகவும் இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் அவ்வளவு கொடுக்க முடியாது என்று தெரிகிறது. அந்த முறையில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதென்றால் திருச்செந்தூர் பகுதியில் உடன்குடி வட்டாரத்தில்தான் சாகுபடி செய்யும் நிலைமையிருக்கிறது. நிகர ஆதாயம் குறைந்த பட்சம் ரூ. 1,770 கிடைக்குமென்று சொல்கிறார்கள். சராசரியாகப் பார்த்தால் ஒரு போகத்தில் 25 மூட்டை விளையும் என்று எதிர்பார்க்கிறோம்.

Admission into Medical Colleges.

*341 Q.—THIRUVALARGAL M. RAJAH IYER and N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to lay a paper on the table of the House indicating the number of students selected for admission into the Medical Colleges in the State during 1968–69, district-wise?

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்தல்

திரு. எம். ராஜா அய்யர், திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.

1968–69-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1968–69-ம் ஆண்டில் மாவட்ட வாரியாக இட ஒதுக்கல் செய்யப்படவில்லை.

திரு. வி. ஈஸ்வர மூர்த்தி : மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட பின்பு பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக மாவட்ட வாரியாக இவ்வளவு மாணவர்கள் எடுக்கப்பட்டார்கள் என்ற விவரத்தை அரசாங்கம் அறிவிக்குமா ? அப்படி அறிவிப்பதில் என்ன பிரச்னை இருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றுதான் கூறினேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கொடுப்பதைப் பற்றி இப்போது யோசனை இல்லை.

Primary Health Centres.

* 342. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(a) the number of blocks without Primary Health Centres; and

(b) the number of Primary Health Centres functioning without doctors either with L.I.M., G.C.I.M. or M.B.B.S. qualifications?